# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.63/2020

## CNR.No.TNCB19000

| **Deposition** | **:** | **DW.2** |
|---|---|---|
| Name | : | ரங்கராஜ் |
| Father's / Husband's Name | : | ராமைய கவுடர் |
| Village / முகவரி | : | தோலம்பாளையம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 65 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 15th April 2026

**முதல் விசாரணை**

நான் தோலம்பாளையத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். நான் வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதியை தெரியாது. பிரதிவாதிகளை தெரியும். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். 1ம் பிரதிவாதியை தெரியும். சுப்பைய கவுடர் 19.10.2015 ம் வருடம் 1ம் பிரதிவாதி பரமேஸ்வரனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். சுப்பைய கவுடர் என்னை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுவதற்கு சாட்சியாக இருக்கச் சொல்லி கேட்டார். சாதனா டைப் ஆபிசில் பத்திரம் எழுதியபிறகு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பதிவாளர் அலுவலகத்திற்கும் சென்று சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி. வா சா.ஆ 13 ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் செட்டில்மெண்ட் பத்திரத்தைதான் சுப்பையகவுடர் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தார். பத்திரம் எழுதும்போது சுப்பைய கவுடர் நல்ல மனநிலையில் இருந்தார். அந்த பத்திரம் யாருடைய தூண்டுதலின் பேரிலும் எழுதவில்லை அவரே தன்னிச்சையாக எழுதினார்.

குறுக்கு விசாரணை

( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.